Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.216/2025

**P.W**. (LW6)

| | |
|---|---|
| Name | : **திரு.முத்துப்பாண்டி** |
| Father/Husband Name | : திரு,அருணாச்சலம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது திருக்கழுக்குன்றத்தில் குடியிருந்து சொந்தமாக கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். சாட்சி வினோத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.**

**2) சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு 9.30 மணியளவில் நான் வீட்டிலிருந்து கடைக்கு வந்துக் கொண்டிருந்த போது மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. அப்போது கூட்டமாக இருந்தது. அந்த இடத்தில் விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். வழக்கு குறித்து வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் படம் வரைந்து என்னிடம் ஒரு தாளில் கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.**

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் கோரப்பட்டு அது நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

கடந்த 26.05.2025ம் தேதி காலை சுமார் 8 மணியளவில் நானும் எனக்கு தெரிந்த வினோத் என்பவரும் திருக்கழுக்குன்றம் மேட்டு மங்களம் தர்க்ஷன் மோட்டாஸ் எதிரே நின்றுக் கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் போலிசார் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து மகசர் தயார் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் நான் பார்வை மகசரில் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த போது அந்த இடத்தில் மட்டும் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது என்றால் அனைத்து பகுதிகளிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இது குறித்து போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.216/2025

**P.W**. 5(LW7)

| | |
|---|---|
| Name | : **திரு.வினோத்** |
| Father/Husband Name | : திரு,மாரி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026

**முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது நடுவக்கரை குடியிருந்து டைலர் கடையில் வேலை செய்து வருகிறேன். சாட்சி முத்துப்பாண்டி என்பவரை எனக்கு தெரியும். நான் வேலை செய்யும் கடைக்கு அருகில் காய்கறி கடை வைத்துள்ளார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதல்ல. வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்து என்னுடைய விலாசம், போன் நெம்பர் வாங்கினார்கள்.**

**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் கோரப்பட்டு அது நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

கடந்த 26.05.2025ம் தேதி காலை சுமார் 8 மணியளவில் நானும்

எனக்கு தெரிந்த முத்துபாண்டி என்பவரும் திருக்கழுக்குன்றம் மேட்டு மங்களம் தர்க்ஷன் மோட்டாஸ் எதிரே நின்றுக் கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் போலிசார் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து மகசர் தயார் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் நான் பார்வை மகசரில் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல. விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இது குறித்து போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.